DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 186/2022 Crime No. 17/2022 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-7/LW8- வெங்கடாசலம் | Village | |
| Father Name | சீரங்கன் | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 11.06.2024 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் கூலிக்காரன்பாளையத்தில் குடியிருந்து கொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு சம்பவம் நடந்த இடத்திற்கு போலீசார் வந்து பார்வையிட்டு என் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **இந்த சாட்சி மூலமாக பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் இட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் இட்டேன்.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 186/2022 Crime No. 17/2022 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW8-/Lw13- A.ரகுநாதன் | Village | |
| Father Name | ராஜகவுண்டர் | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 11.06.2024 |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது, ஈரோடு மாவட்டம், சிவகிரி காவல் நிலையத்தில், காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் சக்திவேல் என்பவருக்காகவும் முதற்கட்ட புலன்விசாரணை செய்த காவல் உதவி ஆய்வாளர் கனகராஜ் என்பவருக்காகவும், ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். **கடந்த 09.01.2022.ம் தேதி 15.10 மணிக்கு பவானி காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர்** சக்திவேல் என்பவர் நிலைய அலவலில் இருந்தபோது, பவானி அரசு மருத்துவமணையிலிருந்து கிடைக்கப்பெற்ற பிரகாஷ் (38) த/பெ. அம்மாசை க.எ.ண் 117, தயாலன் தோட்டம், ஏமம்பாளையம், பவானி தாலுகா என்பவரது இண்டிமேசன் பேரில் பவானி அரசு மருத்துவமணை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பிராகாசை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பவானி காவல் நிலைய கு.எ.ண்.17/2022 சபி 294(பி), 324, 506(ii) இதச பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, புகார் வாக்குமூலம் ஆகியவற்றை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு அனுப்பி வைத்தும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை புலன்விசாரணைக்காக